இல்லையா என்ற சந்தேகம் சட்டத்தைப் பின்பற்றுகிற மக்களுக்கு வந்துவிடும் என்ற காரணத்தால் தெரிவிக்கிறேன். தைரியமான அதிகாரி திரு. தேவாரம், இந்த இரண்டு பேரையும் பிடிப்பதற்கு உடனே முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அண்ணாநம்பி அவையிலிருந்து வெளியேற்றப்பட்டு இருப்பதால், அவர் அவையிலிருந்து வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு) 'Marshall' அவரை வெளியேற்றலாம்.

(திரு. அண்ணாநம்பி பேரவையினின்றும் வெளியேற்றப் பட்டார்.)

10.05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்களும், நண்பர் பாண்டியன் அவர்களும் ஆட்டோ சங்கர் சிறையிலிருந்து தப்பியதன் அடிப்படையில் சில கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நண்பர் பாண்டியன் அவர்கள் இந்த நீதி விசாரணை எந்த நீதியைத் தெரிந்துகொள்ள, எந்த நீதியை வரவழைக்க என்ற அடிப்படையிலே தன்னுடைய கருத்தை இங்கே அமைத்து, வினா எழுப்பினார்கள். நீதிபதி விசாரணையைத் தான் நாம் சுருக்கி நீதி விசாரணை என்று சொல்கிறோம். ஏற்கெனவே இந்த வழக்கு, மாநில கிரைம் பிராஞ்சுக்குத் தரப்பட்டு, புலன் விசாரணையில் அவர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

நான் நேற்றைக்கு முன் தினமும், நேற்றும் அறிவித்ததைப் போல, அந்த சிறைச்சாலையில் உள்ள சூப்பிரின்டெண்டெண்ட் உள்பட 13 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 3 பேர்கள் கைது செய்யப்பட்டு, மற்றவர்கள் தற்காலிகமாக வேலை நீக்கமும் செய்யப்பட்டு இருக்கிறார்கள். இது ஒரு பெரிய நடவடிக்கை என்பதை யாரும் மறுக்க இயலாது. அந்த நடவடிக்கை எடுத்து, ஒரு அதிகாரியைக் கொண்டே விசாரணை என்கிற அளவிலே கூட நிறுத்தி இருக்கலாம். அப்படிப்பட்ட—விவாதத்தில்—கருத்துக்கள் கூட அதிகாரிகள் மட்டத்திலே எடுத்துச் சொல்லப்பட்டது. இருந்தாலும் கூட ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரிப்பதன் மூலம் நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன பல்வேறு கருத்துக்களுக்கான உண்மைகள் வெளிப்படும், வெளிப்பட வேண்டும் என்பதிலே நான் மிகுந்த உறுதியாக இருக்கிற காரணத்தாலேதான், அவைகள் வெளி வரவேண்டும் என்பதற்காகத்தான் நீதிபதியைக் கொண்டு அந்த விசாரணை நடைபெற வேண்டும் என்ற அந்த முடிவை எடுத்து, நேற்றைய தினம் அறிவிக்கப்பட்டு இருக்கின்றது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஆகஸ்ட் 23

உண்மையிலே நண்பர் பாலசுப்பிரமணியம் பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இவைகள் எல்லாம் எந்த அடிப்படையிலே நடைபெற்று இருக்கின்றன, எத்தகைய திரைமறைவுப் பணிகள் கடந்த ஆண்டுகளில் நடந்திருக்கின்றன, அரசுக்குத் தெரியாமல், அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வராமல் அரசினுடைய கண்களை மறைத்துவிட்டு, அரசு அதிகாரிகள் சிலரே இதுபோன்ற ஒரு சமுதாய விரோதியினுடைய செயல்களுக்கு உடன்பாடாக இருந்து இருப்பதும், அவன் சிக்சிக் கொண்ட பிறகு அவனையும் அவனுடைய கூட்டாளிகளையும் விடுவிப்பதற்குஉடந்தையாக இருந்திருப்பதும் மன்னிக்க முடியாத குற்றங்களாகும். அப்படிப்பட்ட குற்றவாளிகளை அடையாளம் காட்டுவது மாத்திரம் அல்ல, அவர்களுக்கு யார் யார் ஒத்துழைத்தார்களோ, அவர்களையும் அடையாளம் காட்டவேண்டும். இந்த மாநில கிரைம் பிராஞ்ச் புலன் விசாரணையோடு முடிவுற்று ஓடியவர்கள் பிடிக்கப்பெற்று, ஓடுவதற்குக் காரணமாக இருந்த சில பேர்கள் தண்டிக்கப்பட்டால் மட்டும் போதாது என்பது என்னுடைய எண்ணம்.

அதற்குப் பின்னாலே, பின்னணியிலே, எத்தன்ன பேர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான், ஆரம்பகாலத்திலே மிகுந்த பரபரப்போடு ஆட்டோ சங்கர் கைது செய்யப்பட்ட காலத்திலே வெளிவந்த பல விவரங்கள், அதற்குப் பிறகு, அவைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக தேய்ந்து ''ஃபேட் அவுட்' ஆகிவிட்ட நிலையிலே மறைந்துவிட்ட பல விஷயங்கள், இவைகள் எல்லாம் மீண்டும் கிளப்பப்படுவதற்கு நீதிபதி விசாரணை தேவை என்கிற முடிவை அரசின் சார்பிலே எடுத்திருக்கிறோம். அந்த விசாரணையிலே நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் தனக்குக் கிடைத்த தகவல்களை எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த அவையிலே பேசுவதோடு அமையாமல், அவர்கள் கடந்த இரண்டு நாட்களாக ஓர் எதிர்க்கட்சிக்கு உரிய இலக்கணத்தோடு என்னென்ன கடமைகளைச் செய்ய வேண்டுமோ அந்தக் கடமைகளை எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் சொன்ன கருத்துக்களும் உள்ளபடியே ஏற்றுக்கொள்ள வேண்டிய நல்ல கருத்துக்கள். அவ்வளவு கருத்துக்களும் உண்மையா அல்லவா என்பது பிரச்சினைக்குரியதாக இருந்தாலும் கூட, உண்மை எது, உண்மை அல்லாதது எது என்பது நாட்டுக்குத் தெரிந்தாக வேண்டும். அதற்கு நீதிபதியினுடைய விசாரணை நிச்சயமாகப் பயன்படும் என்ற கருத்தை நண்பர் பாண்டியன் அவர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலே பணியில் உள்ளவர்களை நியமிப்பதைப் பற்றி சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் அவர்கள் சொன்ன கருத்தை பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே நினைவுபடுத்தி இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கருத்து தனக்கு ஒத்தது இல்லை என்றும் அவர்கள் குறிப்

பிட்டு இருக்கிறார்கள், பணியில் உள்ளவர்களை இந்த நீதிபதி விசாரணைக்கு அமர்த்துவதா, அல்லது ஓய்வு பெற்ற ஒருவரை அமர்த்துவதா என்ற முடிவை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் எடுத்து நமக்கு அறிவிப்பார்கள் என்று நான் நம்பு கிறேன். அத்தகைய அறிவிப்பு வந்த பிறகு, அவர்கள் யாரை வைத்து இந்த விசாரணையை நடத்தலாம் என்று கருதுகிறார் களோ, அது நாட்டுக்கு செய்தியாக அறிவிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-10 மணி.

இத்தோடு சேர்த்து பாண்டியன் அவர்கள் வேறொரு வழக் கைப் பற்றியும்—சந்தனக் கடத்தல் வீரப்பன் தமிழ்நாட்டில் தான் இருக்கிறார் என்று பத்திரிகையிலே செய்தி வந்ததாகச் சொன்னார். சந்தனக் கடத்தல் வீரப்பன் தமிழ்நாட்டிலே இல்லை என்பது தான் எங்களுக்கும் கிடைத்துள்ள தகவல். இது நம்முடைய காவல்துறையை மாத்திரம் குற்றம் சொல்வதாக கருதிவிடக் கூடாது. இதிலே எல்லா அதிகாரங்களையும் காவல் துறைக்கு-இங்குள்ள அரசு மாத்திரமல்ல, கர்நாடகத்திலே உள்ள அரசும் சேர்ந்து எல்லா அதிகாரங்களையும் காவல்துறைக்கு-அளித்திருக்கிறது. கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் வீரேந்திர பாட்டீலை டில்லியிலே சந்தித்த போது அவரோடு இதைப் பற்றி நான் பேசியிருக்கிறேன். அவரும் இதைப்பற்றி என்னிடத்திலே விவாதித்திருக்கின்றார். இரு தரப்பு, இரு அரசுகளுடைய போலீசாரும் கலந்து பேசி, மிகுந்த ஒற்றுமை யோடு இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

அவர்கள் குறிப்பிட்ட தேவாரம் போன்ற அதிகாரிகளைப் பயன்படுத்த இந்த அரசு தயங்காது, அவருக்கு வேறு பணிகள் இருக்கின்ற காரணத்தால் இந்தப் பணி ஒப்படைக்கப்படாமல் இருந்திருக்கலாம். அவரை இந்தப் பணியிலே ஈடுபடுத்துவதிலே இந்த அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் கிடையாது. எப்படி யும் இது போன்ற சமுதாய விரோதிகளை, அரசுக்கு வர வேண்டிய வருமானத்தை வேறு வழியிலே இன்றைக்கு திருடிக் கொண்டிருக்கிற இத்தகைய கொள்ளைக்காரர்களைப் பிடிப் பதிலே அரசு தீவிரமாக இருக்கும். இதிலே இரண்டு அரசு களும்—கர்நாடகம், தமிழகம் ஆகிய இரண்டு மாநில அரசுகளுமே-மும்முரமாக ஈடுபட்டு இருக்கின்ற காரணத்தால் விரைவிலே அந்தத் திருடர்கள் பிடிபடுவார்கள் என்பதையும் நான் தெரி வித்துக் கொண்டு, இந்த நீதிபதி விசாரணையில் மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்களைப் போன்ற உறுப் பினர்கள் தங்களுக்கு கிடைக்கின்ற தகவல்களை எல்லாம் தர வேண்டும். ஏனென்றால் மறைந்து கிடக்கின்ற ஒரு பேருண்மை நாட்டுக்கு வெளியிடப்பட வேண்டுமென்ற அந்த ஆசையின் காரணமாக இதைத் தெரிவித்து அமைகிறேன்.